வெஸ்பா VESPA
உலகதரமிக்கது
இம்மாதம் முடிவில்
இறக்குமதியாகும்
ஸ்கூட்டர்களுக்கு
இன்றே பதிவு செய்யுங்கள்
எண்ணுக்கு ஏற்ற நிறம்...
மனதுக்கு ரம்மியம்
சி.சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் - போன் 284

★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 20 ஆவணி 31 ஷவ்வா: 12 இதழ்: 217
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 16-9-78

செல்வச்சந்நிதி முருகா!
அடியார்கள் குறை தீராயோ!!
சரணம்!!! சரணம்!!!
உங்கள் தேவைகள்
எதுவானாலும் நாடுக
சி. சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் - போன்: 284

### ஜனாதிபதி கமிஷனுக்கு எதிராக சிறிமா தொடர்ந்த வழக்கு:

# நீதிமன்றத்தின் முடிவுக்கு அரசு செவிசாய்க்கத் தயங்காது

## ஜனாதிபதி அறிவிப்பு

(கொழும்பு)

**முன்னாள் பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் அதிகாரதுஷ்பிரயோகம், ஊழல் ஆகியன குறித்து விசாரணை செய்துவரும் ஜனாதிபதி கமிஷனுக்கு எதிராக திருமதி பண்டாரநாயக்கா தாக்கல்செய்துள்ள வழக்கில் நீதிமன்ற முடிவுக்கு அரசு செவிசாய்க்கத் தயங்கமாட்டாது என்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.**

நீதிபரிபாலனத்தில் என்றுமே அரசு தலையிடமாட்டாது என்றும் தெரிவித்த ஜனாதிபதி, மக்களுக்குள்ள சகல உரிமைகளையும் அரசு மறுக்கமாட்டாது என்றும் கூறினார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு எதிராக மேன்முறையீடு செய்ய இன்று திருமதி பண்டாரநாயக்காவுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது; ஆனால் அவர்களது ஆட்சிக்காலத்தில் எமக்கு இந்த உரிமை எதுவும் வழங்கப்படவில்லை என்றும் திரு. ஜெயவர்த்தன கூறினார்,

மாளிகாகந்த பிரிவேனாவில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையிலேயே திரு. ஜெயவர்த்தன மேற்கண்டவாறு கூறினார்,

### மந்திரிசபை முடிவு

18 வயதுக்குக் குறைந்தவர்களுக்கு மதுவிற்பனை செய்வதைத் தடைசெய்வது என்று அமைச்சரவை முடிவுசெய்துள்ளது என்றும் இவ்வைபவத்தில் தெரிவித்த திரு, ஜெயவர்த்தன எமது சட்டங்களில் பஞ்சசீலக் கொள்கைகளின் சாராம்சம் பிரதிபலிக்கவேண்டும் என்றும் கூறினார். (இ)

### தமிழும் சிங்களமும்

## தேசிய மொழிகளானாலும் இங்கு இரண்டு இனங்கள் இல்லையே

### சன்சோனி கமிஷன் முன் சாட்சியம்

[கொழும்பு]

புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தில் தமிழும் சிங்களமும் தேசிய மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டாலும் இந்த நாட்டில் இரு தேசியஇனங்கள் இல்லை. இந்நாட்டில் வாழும் நாம் அனைவரும் ஒரே தேசிய இனம்தான்.

இவ்வாறு இலங்கைப் பல்கலைக்கழக செனட்டின் உதவிப் பதிவாளர் திரு, விஜயரத்ன பண்டார நேற்று சன்சோனிக் கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாது:

சனத்தொகை விகிதாசாரத்தைவிட அதிகவிகிதத்திலேயே தமிழ் மாணவர்கள் முன்னர் பல்கலைக்கழகங்களில் அனுமதிக்கப்பட்டனர். தரப்படுத்தல் அமுல்செய்யப்பட்டது.

மீண்டும் மொழிவாரி தரப்படுத்தல்முறை ரத்துச்செய்யப்பட்டால் சிங்களமாணவர்கள் மத்தியில் விரக்திநிலை உருவாகும்.

மலேஷியாவில் 53 வீதம் மலாயர்களும், 45 வீதம் சீனர்களும் வாழ்கிறார்கள். அதேவிகிதத்திலேயே பல்கலைக்கழக அனுமதியும் அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

### ஜே.ஆர். தமதுகருத்தை மாற்றிவிட்டார்

திரு. ஜே ஆர். ஜெயவர்த்தன மொழிவாரி, மாவட்ட ரீதியிலான தரப்படுத்தலை ஒழிக்க வேண்டுமென்று முன்னர் கருத்துக்கொண்டிருந்த போதிலும் இப்போது தமது கருத்தை மாற்றிக் கொண்டுள்ளார்.

### துணைவேந்தர் சாட்சியம்

பல்கலைக்கழக துணைவேந்தர் கலாநிதி சிறிவர்த்தன சாட்சியமளிக்கையில் பல்கலைக்கழகப் பரீட்சைகளில் 75ம்

[6-ம் பக்கம் பார்க்க]

## யாழ். தேர்தல்கூட்ட குறிப்பு கமிஷனுக்கு கிடைத்தது

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேர்தல் கூட்டத்தில் நிகழ்த்தப்பட்ட பேச்சுக்கள் அடங்கிய யாழ். பொலிசாரின் குறிப்பேடுகள் கமிஷனுக்குக் கிடைத்துள்ளதாக சன்சோனிக்கமிஷனின் செயலாளர் நேற்று கமிஷனின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

யாழ். தேர்தல் கூட்ட பேச்சுக்கள் அடங்கிய பொலிஸ் அறிக்கையை கமிஷன் முன் சமர்ப்பிக்குமாறு கமிஷனர்ஏற்கனவே உத்தரவிட்டிருந்த போதிலும் நீண்டநாட்களாக அது சமர்ப்பிக்கப்படாதினால் தாமதத்திற்கான காரணம் பற்றி கமிஷனர் கடந்த திங்களன்று பொலிசாருடம் கேட்டிருந்தது தெரிந்ததே [ம-இ]

### வேலைநிறுத்தம்

(சங்கானை)

வலி- தென்மேற்கு தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச்சங்க ஊழியர்கள் இம் மாதம் 14ம் திகதி முதல் வேலைநிறுத்தம் செய்து வருகின்றனர்,

கடந்த ஆறு வருடகாலமாக பணிபுரிந்துவரும் ஊழியர்களுக்கு கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுக் கட்டளைச்சட்டத்தின்கீழுள்ள குறைந்தபட்ச உரிமைகளோ சலுகைகளோ, பாதுகாப்புக்களோ மறுக்கப்பட்டு வந்தமையாலும். இதுபற்றி நிர்வாகத்தாருக்கும் உயர் அதிகாரிகளுக்கும் தெரிவித்தும் எந்த பயனும் கிட்டாமையாலுமே ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ)

### பனம் பொருள் அபிவிருத்தி

# ஆராய்ச்சி நிலையம் பளையில் அமையும்

### 200 ஏக்கர் காணி ஒதுக்கீடு

[யாழ்ப்பாணம்]

பனம்பொருள் அபிவிருத்தி ஆராய்ச்சிநிலையம் பளையில் அமைக்கப்பட உள்ளது. இதற்காக 200 ஏக்கர் முடிக்குரிய நிலம் வழங்க யாழ் அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னாண்டோ இணக்கம் தெரிவித்துள்ளார்.

யாழ். அரசாங்க செயலகத்தில், யாழ் அரசாங்க அதிபருடனும் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும் பனம்பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. கே. சி. நித்தியானந்தா நடாத்திய மகாநாட்டிலேயே இந்தஇணக்கம் தெரிவிக்கப்பட்டது.

ஆராய்ச்சி நிலையத்தில், சீவல்தொழிலாளர்களுக்கு பயிற்சி, கருப்பஞ்சீனி உற்பத்தி, குடிசைக் கைத்தொழில் பயிற்சி, புதிய ஆராய்ச்சி போன்றவைகள் மேற்கொள்ளப்படும் என்று திரு. நித்தியானந்தா தெரிவித்தார்.

பனம்பொருள் அபிவிருத்தி ஆராய்ச்சிநிலைய தலைமைக் காரியாலயம், அக்டோபர் முதல்வாரத்தில் யாழ்.தேசிய வீடமைப்பு திணைக்கள கட்டிடத்தில் திறக்கப்படவுள்ளது என்றும் திறப்புவிழா வைபவத்தில் தோட்டக் கைத்தொழில் அமைச்சர் திரு. எம். டி. எச். ஜயவர்த்தனகலந்துகொள்வார்என்றும் அவர்தெரிவித்தார். [கெ-இ]

## கூட்டணி எம். பி.க்கள் பதவிப் பிரமாணம்?

### செயற்குழு இன்று கூடுகிறது

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணி மத்திய செயற்குழு இன்று காலை யாழ்பாணத்திலுள்ள தனது தலைமைப்பணியகத்தில் கூடுகின்றது.

செயற்குழு கூட்டத்திற்கு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும், நல்லூர் எம். பியுமான திரு. எம். சிவசிதம்பரம் தலைமைதாங்குவார்,

கூட்டணி எம் பிக்கள் பாராளுமன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்வது பற்றி இக்கூட்டத்தில் இறுதிமுடிவெடுக்கப்படும்.

புதிய அரசியலமைப்பால் தமிழ் மக்கள் மத்தியில் எழுந்துள்ள நெருக்கடி; தமிழ்ப்பகுதியில் திட்டமிட்ட சிங்கள போதனை முயற்சி பற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப்படும்

மாலை யாழ். எம். பி. திரு.

(6-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

செல்வச்சந்நிதி முருகன் ஆலய கோபுரத்தின் முன்வீதியில் அமைந்துள்ள ''மில்க் வைற்'' விளம்பர விற்பனைக் காட்சிச்சாலையில் ''மில்க் வைற்'' தயாரிப்புக்களை வாங்குபவர்களுக்கு அழகிய பொலித்தீன் பையும், மேலுறைகளுக்கான அன்பளிப்புக்களும் வழங்கப்படும். மில்க் வைற்-யாழ்ப்பாணம். 0292

சொந்தப் பாவனையிலுள்ள மொறிஸ் மைனர் கார்—EN 7954 விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறுகளில் கீழ்காணும் விலாசத்தில் பார்வையிடலாம் 22/2, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். 0323

தெல்லிப்பழையில் தனிக் கிணற்றுடன் 16 பரப்புத் தோட்டக்காணி உடனடி விற்பனைக்குண்டு. திருமதி ந. சிவரத்தினம், 'அம்பிகை வாசா', பார் மணியம் ஒழுங்கை, தெல்லிப்பழை. 0321

B. A. தம்பி ஒழுங்கையில் 4¾ பரப்புக் காணி பரப்பு ரூபா 25,000/- நா. சண்முகலிங்கம், 124, நாவலர்வீதி, வண்ணார்பண்ணை. 0333

யாழ்ப்பாணம் 4-ம் குறுக்குத் தெருவில் 9/2 இலக்கமுள்ள 4 பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. விலை விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்: ஜே. எஸ். ஜேகப் 421/30 டார்லி ரூட் (Darley Road) கொழும்பு-10. 0316

மின்சார இயந்திரம் (Generator) 25 கிலோ வாட், 440 வால்ட்ஸ், 3 பேஸ், தன்னியக்கம் 'றேடியேட்டர்' குளிரூட்டி, ரம்மியமான நிலைமை. ரூபா 50,000-க்கு மேல் மதிப்பிடவும். நோர்த் மாரின் லிமிட் 143, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம். 0326

புதிய மேசை விசிறி விற்பனைக்கு பழைய இலக்கம் 167, கோவில் வீதி, நல்லூர். 0342

புத்தம் புதிய (Two-in-one) நசனல் பனசொனிக் (RQ-554FTS) 5 பான்ட் சொனி ஸ்ரீரியோ (CF 570S) இரண்டு ஸ்பீக்கர் மொடல். 4 பான்ட் கொண்டது. விபரங்களுக்கு: M. புலேந்திரன் நவரட்ணராஜா வீதி, கோண்டாவில் மேற்கு. 0338

### தேவை

சேவிஸ் ஸ்ரேசனில் வேலை செய்து அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை. அனுபவத்திற்கேற்ப சம்பளம் வழங்கப்படும். நேரில் சமுகமளிக்கவும். லிங்கோ லுப்பிறிக்கேசன் சேவிஸ், பலாலி ரோட்டு கோண்டாவில். 0315


## குருநாகல் இந்து வித்தியாலய விழா

(குருநாகல்)

குருநாகல் இந்து தமிழ் மகா வித்தியாலய வருடாந்த பெற்றோர்தின விழாவும், பரிசளிப்பு விழாவும், புதிய கட்டிடத் திறப்பு விழாவும் 20ம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

பிரதம அதிதியாக குருநாகல் அரசாங்க அதிபர் திரு. எஸ். கதிர்காமநாதன் கலந்து கொள்ளும் இவ்விழாவில் கல்வி அதிகாரி ஜனப் எம். எம். ஏ. குத்தூஸ் கட்டிடத்தைத் திறந்து வைப்பார்.

# அடையாள வேலைநிறுத்தம் பற்றிய ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தொழிற் சங்கக் கூட்டுக் கமிட்டிக் கூட்டத்தில் தமிழர் தொழிற் சங்கக் கூட்டணியும் பங்குபற்றியது.

யாழ்ப்பாணம் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் மேற்படி சபை அமைப்பாளர் திரு. எஸ். நடராசா தலைமையில் எதிர்வரும் 28ம் திகதி நடைபெறவுள்ள அடையாள வேலை நிறுத்தம் சம்பந்தமாக இக் கூட்டம் நடைபெற்றது.

தமிழர் தொழிற்சங்கக் கூட்டணியின் கோரிக்கையான அரசகருமமொழி சட்டத்தால் வேலையிழந்தவர்களுக்கு வேலை வழங்கவேண்டும் என்ற கோரிக்கையை ஏனைய சங்கங்களின் வட பிரதேசக்கிளையினர் ஏற்றுக்கொண்டு, இக்கோரிக்கை எல்லா தொழிற் சங்கங்களுக்கும் பொதுவான கோரிக்கை தானென்றும் தத்தமது சங்கங்களும் தங்கள்மட்டத்தில் இக்கோரிக்கைக்காக தொடக்கத்திலிருந்தே போராடிவருவதாகவும் தெரிவித்தன.

எனினும் அடையாள வேலை நிறுத்தத்தின் ஆறு கோரிக்கைகளில் ''அரசகரும மொழி'' என்று குறிக்கப்படாததால் அதனைச் சேர்ப்பதற்கு ஏகமனதாக தாம் கொழும்பிலுள்ள தொழிற்சங்கங்களின் கூட்டுச் சபை தலைமைப்பீடத்துக்கு சிபார்சு செய்வதாகவும் தெரிவித்தன.

ஏற்கனவே நடைபெற்ற தொழிற் சங்க கூட்டுச்சபை கூட்டங்களுக்கு தமிழர் தொழிற் சங்க கூட்டணி பலமுறை அழைக்கப்பட்ட வேளைகளில்அது அதில் பங்குபற்றியிருந்தால் இக்கோரிக்கை தொடக்கத்திலேயே சேர்க்கப்பட உதவியாக இருந்திருக்குமென்றும், அரசாங்கத்திற்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டு விட்ட ஆறு கோரிக்கைகளுள் தமிழர் தொழிற்சங்கக்கூட்டணியின் கோரிக்கையும் சேர்க்கப்படாமல்விடுபட்டாலும் தொழிலாளர் ஐக்கியத்திற்காக தமிழர் தொழிற்சங்கக் கூட்டணியினர் வேலை நிறுத்தத்தில் பங்குபற்ற வேண்டுமென்றும் அதனால் எதிர்காலத்தில் இக்கோரிக்கை முன்வைக்கப்படமுடியும் என்றும் அங்கு தெரிவிக்கப்பட்டது. (கூ)


## உடுப்பிட்டிக் கிராமச்சபை கேள்வி விளம்பரம்

உடுப்பிட்டிக் கிராம சபை விசேட ஆணையாளரால் கீழ்க்காணும் வேலைகளுக்கு பதிவு செய்த ஒப்பந்தகாரரிடமிருந்து சில் வைத்த கேள்விகள் 27-9-78 நண்பகல் 12-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் ரூபா 50/- வைப்புப் பணமாகவும் ரூபா 20/- பத்திரக் கட்டணமாகவும் 26-9-78 பிற்பகல் 3-00 மணி வரை எமது கிராமசபை அலுவலகத்தில் செலுத்தியதன் பேரில் வழங்கப்படும்.

ஏனைய விடரங்கள் சபை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

### வேலைகளின் விபரங்கள்

1. வீனஸ் சேக்குல ரோட்டு திருத்தவேலை - கரணவாய் தெர்கு.
2. பலியாவோடை ரோட்டு திருத்த வேலை கரணவாய் வடக்கு.
3. கம்பர்மலை மணல் தெரு ரோட்டு திருத்தவேலை கம்பர்மலை.

ஆ. குணநாயகம்,
விசேட ஆணையாளர்,
உடுப்பிட்டிக் கிராமசபை.

உடுப்பிட்டிக் கிராம சபை,
கரணவாய் வடக்கு,
கரவெட்டி,
13-9-78. 0339

## அடைவு நகை ஏலவிற்பனை

1971-ம் ஆண்டு தை 1-ம் திகதி தொடக்கம் 1976-ம் ஆண்டு மார்கழி 31-ந் திகதி வரை தெ. தவராஜலிங்கம், 576/6, அம்மன்ரோட், கலட்டி யாழ்ப்பாணம். மேற்படி விலாசத்தில் அடைவுவைத்து மீட்கப்படாத நகைகளை 25-9-1978 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஆ. தா. வடிவேலு,
ஜே. பி.
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும், ஏலவிற்பனையாளரும்.
''வடிவேல் உதயம்''
கே. கே. எஸ். வீதி,
கோண்டாவில்.
25-8-1978 0341


## அஞ்சல் தந்தி தொடர்புக் கூட்டம்

(வண்ணார்பண்ணை)

அகில இலங்கை அஞ்சல் தந்தித் தொடர்புகள் சேவையாளர் சங்க யாழ். கிளையின் 28 வது வருடாந்தப்பொதுக் கூட்டம் இன்று காலை யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கிறது.

இக்கிளையின் தலைவர் திரு. ஆ. வி. ஆறுமுகம் தலைமையில் யாழ். தபால் நிலைய மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் வருடாந்த நிர்வாகிகளுக்கான தேர்வுகளும் இடம் பெறுகின்றன.

யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் தாய்ச்சங்க பொதுச்செயலாளர் திரு. பி. சாசனதாச தபால்தந்தி பிராந்திய அத்தியட்சகர் திரு. எஸ். பாலசிங்கம் ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்ள விருக்கின்றனர்.

## பனம் விதைகள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி இந்துசமய விருத்திச் சங்கத்தினர், 2000 பனம் விதைகளை, சிவதர்ம வள்ளல் திரு. க. கனகராஜாவிடம் நாளை ஞாயிறு காலை அன்பளிப்புச்செய்யவிருக்கின்றனர் சைவப்புலவர் திரு. க. சி. குலரத்தினம் 'பனம் பொருள் உற்பத்தி'பற்றி சிறப்புரையாற்றுவார்.

நீர்வேலி கந்தசுவாமிதேவஸ்தானக் குருக்கள் பிரம்மஸ்ரீ சு. இராசேந்திரக் குருக்களால் மேற்கொள்ளப்படவிருக்கும் இப்பனம் விதைகள் கிளிநொச்சிப் பகுதி பனைவிருத்திக்காக உபயோகப்படுத்தப்படும் எனத்தெரிகிறது. மரம்நாட்டு விழாவும் நடைபெறும். (ஈ)

## விசேட மகா சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜ பெருமாள் தேவஸ்தானத்தில் இம்மாதம் 20-ந் திகதி காலை 9 மணிக்கு சகஸ்ர சங்காபிஷேகம் நடைபெறும். (ச)


## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க




மில்க் வைற் ஸ்தாபனத்தின் உதவியுடனும் பொது மக்களின் நிதியுடனும் உசன் மனமகிழ் மன்றம் பல்லாயிரக் கணக்கான ரூபா செலவில் உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் கட்டி முடித்துள்ள திறந்த வெளி அரங்கு திறப்பு விழா இன்று நடைபெறுகின்றது. யாழ்ப்பாண மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜெகநாதன், பிரதம கல்வி அதிகாரி திரு. என். ஆர். பாலசிங்கம், பொறியியலாளர் திரு. சி, சிவசண்முகநாதன், சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. ச. முருகவேள், தொழில் அதிபர் திரு. க. கனகராஜா, வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சி. இராசநாயகம் ஆகியோர் திறப்பு விழாவிற் கலந்துகொள்கின்றனர்.

இம்மாத இறுதிக்குள்

# 400 புதிய பஸ்கள் சேவையில் ஈடுபடும்

## இ. போ. ச. தலைவர் தகவல்

(கொழும்பு)

இம்மாத இறுதிக்குள் மேலும் 400 புதிய பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

இத்தகவலை மத்திய இ. போ. ச. தலைவர் திரு. டபிள்யூ. பிரேமரத்தன கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் வெளியிட்டார்.

அடுத்த ஆண்டு பஸ்சேவையின் தொகை 1200 ஆல் அதிகரிக்கப்படும் என்றும் டிப்போக்களின் தொகையும் அதிகரிக்கப்படும் என்றும் 3000 பஸ் அடிச்சட்டங்கள் (செஸி) இறக்குமதி செய்யப்படவுள்ளன என்றும் அவர் மேலும் கூறினர். (உ)

''கைத்தொழில் துறையை

# கிராமிய ரீதியாக ஊக்குவிக்க வேண்டும்''

-- காவலூர் எம். பி.

(யாழ்ப்பாணம்)

''நம் நாட்டுப் பொருளாதாரத்தை வளர்க்க கிராமங்கள் தோறும் கைத்தொழில்களை நாம் ஆரம்பித்து ஊக்குவிக்க வேண்டும்.''

இவ்வாறு ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் சுருவில் இளைஞர் சங்க 10-வது ஆண்டு விழாவில் பேசுகையில் கூறினர்.

அவர் மேலும் தமது உரையில் கூறியதாவது:

''அடிமைப்பட்ட சமுதாயம் விடுதலை பெற இளைஞர் சக்தி அவசியம்.

எம் நாட்டுப் பொருளாதாரத்தை வளர்க்க நாம் ஊர்கள் தோறும் கைத் தொழில்களை உருவாக்க வேண்டும. இதற்கு தெற்கே உள்ள தமிழ் வர்த்தகப் பிரமுகர்கள் உதவவேண்டும் நாம் முன்னேற எம் இனம் முன்னேற பொருளாதாரம் முன்னேறவேண்டும். அதற்கு மக்கள் உழைப்பு பெருகவேண்டும் என்றார்.

பிரதம அதிதியாக திரு. இ. சண்முகமும கலந்து கொண்டார். ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சடாட்சர சண்முகதாஸ், சிவ ஸ்ரீ சோமாஸ்கந்தக் குருக்கள் மற்றும் பலர் உரையாற்றினர். வழக்காடு மன்றமும் ஈற்றில் இடம்பெற்றது. (ச-உ)

# ''நெடுந்தீவுக் குதிரைகள் வெளியேற்றத்தை தடைசெய்க''

## அரசாங்க அதிபருக்கு வேண்டுகோள்

[யாழ்ப்பாணம்]

நெடுந்தீவின் வரலாற்றை நினைவு கூரும் சாதனங்களில் ஒன்றுன குதிரைகள் வெளியிடங்களில் இருக்கும் உல்லாசப் பயணிகளை மிகவும் கவர்ந்துள்ளது. இதனல் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் மாத்திரமன்றி இலங்கையின் இதரபகுதி மக்களும் நெடுந்தீவுக்கு வருகைதந்து அவற்றைப் பார்வையிடுகின்றனர். இந்நிலையில் குதிரைகளை வெளியிடங்களுக்கு எடுத்துச்செல்ல அனுமதிக்கும் பட்சத்தில் தற்போது உள்ள ஒரேயொரு சரித்திரச் சான்றும் அருகிவிடும். எனவே குதிரைகளை வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்வதை முற்ருகத் தடை செய்யவும்.

இவ்வாறு நெடுந்தீவு முன்னேற்றக் கழகம் யாழ், அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளது.

இது தொடர்பாகக் கழகம் அனுப்பிய கடிதத்தில், குதிரைகளை புராதன சான்றுகளைப் பாதுகாக்கும் அடிப்படையின் கீழ் வெளியிடங்களுக்கு ஏற்றுமதி செய்வதைத் தடை செய்வதுடன் அவற்றை அரசின் அல்லது உள்ளூராட்சி மன்றத்தின் உடைமையாகப் பிரகடனப்படுத்துமாறும் கேட்டுள்ளது. (கெ-இ)

ஈழநாடு
The Eelanaadu

## கோயில் இசை நிகழ்ச்சிகள்

கிளிநொச்சிப் பகுதியிலுள்ள கோயில் ஒன்றில் 'பொப்' இசைக்கு தடைவிதிக்கப்பட்டிருப்பதாக ஒரு செய்தி வெளிவந்திருக்கிறது.

கோயில் மரபுகளையும், நமது கலை கலாச்சாரபாரம்பரியங்களையும் பற்றிஅதிகம் தெரியாதவர்களும், இளம் உள்ளங்களை கிளர்ச்சி கொள்ளச் செய்வதெல்லாம் புதுமையென்று கருதுகிறவர்களும் இந்தப் 'பொப்' இசை என்று கூறப்படும் நிகழ்ச்சிகளை கோயில் விழாக்களில்ஏற்பாடு செய்து விடுகிறார்கள்.

'பொப்' இசையில் தற்கால இளைஞர்கள் தம்மை மறந்து ஈடுபடுகிறார்கள் என்பதும் இதில் ஏற்படும்மயக்கத்தினால் பாரம்பரிய கலைகளில் இவர்களுக்கு வெறுப்பு ஏற்படுகின்றது என்பதும் உண்மைதான். அதற்காக, கோயில்விழாக்களை இதற்குப்பயன்படுத்துவதை சரியென்று ஏற்பதற்கில்லை.

தமிழ்மக்களின் தனித்துவமான பாரம்பரியத்தை எடுத்துக்காட்டும் கலைப் பொக்கிஷங்களாக கோயில்கள் விளங்கிவருகின்றன.

சிற்பிகள், ஓவியர்கள், கவிஞர்கள், பாடகர்கள், இசைக்கலைஞர்கள் போன்ற கலைத்துறையைச் சார்ந்த அனைவருக்கும் கோயில்கள் புகலிடம் கொடுத்து வருகின்றன. இக்கலைகள் வளர்வதற்குக் கோயில்களே பெரும்பணியாற்றி வருகின்றன.

பக்திச்சுவை செறிந்த நாடகங்கள், நாட்டியங்கள் போன்றவற்றை வளர்ப்பதற்கும் கோயில் விழாக்கள் உறுதுணைபுரிந்து வருகின்றன.

இது இன்று நேற்று ஏற்பட்ட நிலைமையன்று,நமது மன்னர்கள் காலத்திலிருந்தே தொன்றுதொட்டு இருந்துவரும் நிலைமையாகும்.

காலத்துக்கு ஏற்ப சிற்சில மாற்றங்கள் ஏற்படுவது இயற்கையே. ஆனால் கோயில் புனிதத்தையும், பாரம்பரிய மரபுகளையும் மீறும்வகையில் கலைநிகழ்ச்சிகள் இடம்பெறுவதைத் தவிர்ப்பது வரவேற்கப்பட வேண்டியதாகும்.

கோயில் விழாக்களில் இசைநிகழ்ச்சிகள் வேண்டுமானால், புனிதமும் பாரம்பரியமும் வழுவாத நிகழ்ச்சிகளுக்கே இடமளிக்கப்பட வேண்டும். இவ்வகையில் பக்திச்சுவைசெறிந்த பஜனை பண்ணிசை,கர்நாடக இசை மற்றும் பக்திப் பாடல்கள் ஏராளமாக உண்டு.

'பொப்'இசை போன்றவற்றைக் கேட்கத்தான் மக்கள் கூடுவார்கள் என்ற நிலைமை இருக்குமானால் அப்படியான கூட்டம் கோயில்களுக்கு வராமல்இருப்பதே நன்று.

எனவே கிளிநொச்சி கோவில்நிர்வாகிகள் எடுத்துள்ள முடிவு ஒரு முன்மாதிரியாக இருக்குமென்று கருதுவோம்.

## இன்றைய இராசிப்பலன்

ஆவணி மாதம் 31-ந் திகதி
சனிக்கிழமை
(1 -9-78)

**மேடம்:-** குடும்பக் கவலை தலை தூக்கும், பிதாவழிப் பிணிக்கும் இடமுண்டு, அன்னியர்கள் மூலம் தொல்லைகள் தோன்றி மறையும், பணவிவகாரத்தில் அபிப்பிராய பேதங்கள் உருவாகும், சுமாரான தினம்.

**இடபம்:-** தன்மான வாழ்வுடன் தனமுடைமை சேரும், தாயின் ஆதரவு தவறாது கிடைக்கும், முயற்சி செய், முன்னேற்றமுண்டு.

**மிதுனம்:-** சமூகத்தில் அந்தஸ்து உயர்வதற்கிடமுண்டு, பிள்ளைகளின் முன்னேற்றம் பெருமையைத் தேடித்தரும், மதத் தொடர்பான காரியங்களில் அதிக ஈடுபாடு ஏற்படும், ஸ்தல யாத்திரையொன்றும் மேற்கொள்ளப்படலாம்.

**கடகம்:-** நீண்டநாள் பிரயாணம் ஒன்று மேற்கொள்ளப்படலாம், பொருள் கைவிட்டுப் போவதற்கு இடமுண்டு, வாகனச் சாரதிகள் அதிக கவனம் செலுத்தவும், அமைதி நன்று.

**சிங்கம்:-** மனதுக்கு மகிழ்ச்சிதரும் சம்பவங்கள் இடம்பெறும், குடும்பவாழ்க்கையில் தென்றல் வீசும், தொழில்துறையிலும் புதிய வாய்ப்புக்கு இடம் உண்டு, பெரியோர்களின் ஆதரவும் தவறாது கிடைக்கும்.

**கன்னி:-** சிந்தையில் குழப்பநிலை தென்படும், மனைவியின் உடல்நிலை சிறிது கவலையைத் தரலாம், கடமையில் தடைகள் ஏற்படும், தெய்வ நம்பிக்கை நன்று.

**துலாம்:-** தாம்பத்திய வாழ்க்கையில் அதிக ஒற்றுமைக்கிடமுண்டு, காதலர்களுக்கு இன்பமான சூழ்நிலை தென்படும், பெற்றோர்களாயின் ஆதரவும் கிடைக்கும், தொழில்துறையிலும் வெற்றியுண்டு.

**விருச்சிகம்:-** கடமையில் முதலிடம் கிடைக்கும், பதவி உயர்வுக்கும் இடமுண்டு,வியாபாரத்துறையில் தொடர்புகள் பெருகும், உணவு விடுதி நடத்துபவர்களுக்கு இன்று உற்சாகமான தினம்.

**தனுசு:-** துள்ளி வரும் வெள்ளிப் பணம், புதிய நண்பர்களையும் கொண்டுவரும், அறவழியின் மூலம் மற்றவர்களின் ஆதரவைப் பெறுவீர்கள், முன்னேற்றத்திற்கும் இடமுண்டு.

**மகரம்:-** நெஞ்சம் புண்ணாகி நெடுமூச்சும் வெளிக்கிளம்பும், தொழிலாலே தொல்லைகள் தோன்றும், நிதானம் விரும்பத்தக்கது.

**கும்பம்:-** ஆத்திரப்படுவதால் நண்பர்களைப் பகைத்துக் கொள்ளுவீர்கள், எழுத்து மூலம் தொடர்புகொள்வதை இன்று தவிர்த்துக்கொள்ளவும், வாழ்க்கையில் சோர்வுக்கிடமுண்டு.

**மீனம்:-** எழுத்தாளர்களுக்கு இன்று எழுச்சிமிக்க தினம், சிலர் வாழ்க்கையில் சன்மானம் கிடைப்பதற்கும் இடமுண்டு, குடும்ப வாழ்க்கையிலும் சுமூகமான சூழ்நிலைகள் உருவாகும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

### மணிவாக்கு

தியாகம் பெருகச் சுதந்திர உணர்வும் இன்ப உணர்ச்சியும் பெருகும்.
—திரு. வி. க.

### பருத்தித்துறை சம்பளப் பணம் கொள்ளை:

# "சந்தேகநபர்களை 8 சாட்சிகள் அடையாளம் காட்டவில்லை"

## இருவர் அடையாளம் காட்டினர்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை மகளிர் கல்லூரி ஆசிரியைகளின் சம்பளப்பணம் கொள்ளை தொடர்பாக நடந்த அடையாள அணிவகுப்பில், கல்லூரியைச் சேர்ந்த 8 சாட்சிகளும், சந்தேகநபர்கள் எவரையும் அடையாளம் காட்டவில்லை. அதன்பின்னர் நடந்த அணிவகுப்பில், அழைக்கப்பட்ட வேறுஇரு சாட்சிகளில் ஒருவர் ஒரு சந்தேகநபரையும், மற்றொருவர் இரு சந்தேக நபர்களையும் அடையாளம் காட்டினார்.

பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் கே. ஞானச்சந்திரன் முன்னிலையில், நேற்று முன்தினம் பிற்பகல் 3-15 மணிக்கு ஆரம்பமான அடையாள அணிவகுப்பு இரவு 9-15 மணிக்கு முடிவடைந்தது.

அடையாள அணிவகுப்பையொட்டி, நீதிமன்ற முன்வாசல் ரோட்டு போக்குவரத்திற்கு, பொலிஸாரினால் தடை செய்யப்பட்டிருந்தது. நீதிமன்றத்தைச்சுற்றி, ஆயுதந்தாங்கிய பொலிஸார் பாதுகாப்பாகநின்றனர். அடையாள அணிவகுப்பு சம்பந்தப்பட்டவர்களும், சட்டத்தரணிகளையும் தவிர வேறு எவரும், நீதிமன்ற வளவிற்குச் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

அடையாள அணிவகுப்பில் 35 பேர் இடம்பெற்றனர். இவர்களில் 6 சந்தேகநபர்களும் இருந்தனர்.

சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணிகளான ஜி. ஜி. பொன்னம்பலம் (ஜூனியர்) ஆர். சிறிசிவாயா, ஆர். பரமகுரு, எம். வேலும்மயிலும், சிவாபாலேந்திரா, என். கிருஷ்ணராசா, கே. இரத்தினசிங்கம், திருமதி அர்ச்சுனா, எஸ். இராமச்சந்திரன், வி. அருமைநாயகம், எம். ராஜகுலேந்திரன், வி. யோகசிகாமணி ஆகியோர் ஆஜரானார்கள்.

அடையாள அணிவகுப்பு ஆரம்பமாகுமுன்னர் சட்டத்தரணி ஜி. ஜி. பொன்னம்பலம் அணிவகுப்புபற்றி ஆட்சேபம் ஒன்றை கிளப்பினார்.

அடையாளம் காட்டுவதற்கு ரிமாண்டிலிருந்து கொண்டு வரப்படும் இரு சந்தேகநபர்களும் மற்றும் 6 சந்தேகநபர்களுடன், ரிமாண்டில் ஒன்றாக இருந்ததாகவும், கதைத்ததாகவும் தெரிவித்த திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அக்காரணத்தினால் அடையாள அணிவகுப்பில் பயனில்லை என்று ஆட்சேபித்தார்.

இந்த ஆட்சேபத்தை நீதிபதி, பதிவுசெய்தபின்னர் அடையாள அணிவகுப்பு நடைபெற்றது.

முதலில் பருத்தித்துறை மகளிர் கல்லூரி அதிபரும், பின்னர் 5 ஆசிரியைகளும், கல்லூரி லிகிதரும், காவலாளியும் அடையாளம் காட்டுவதற்கு அழைக்கப்பட்டனர். இந்த 8 சாட்சிகளும், சந்தேகநபர்கள் எவரையும் அடையாளம் காட்டவில்லை.

பின்னர் ரிமாண்டிலிருந்து கொண்டுவரப்பட்ட 2 சந்தேகநபர்கள் அடையாளம் காட்டுவதற்கு அழைக்கப்பட்டனர். இவர்களில் ஒருவர் 6 சந்தேகநபர்களில் ஒருவரையும், மற்றவர் இருவரையும் அடையாளம் காட்டினார்கள்.

நீதிபதி சந்தேகநபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் செய்த பிணை பற்றிய விண்ணப்பம் பற்றி முடிவு செய்வதற்காக நேற்று பிற்பகல் 2மணிவரை வழக்கை ஒத்திவைத்தார். (க)

### இன்று

## பகிரங்க கருத்தரங்கு

(வண்ணார்பண்ணை)

இலங்கை வாலிபசங்க சம்மேளனத்தின் பகிரங்ககருத்தரங்கொன்றுஇன்று காலையாழ்ப்பாணம் ஆனைப்பந்தி உயர் கலைக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இருமேலாதிக்க வல்லரசுகளின் யுத்தக் கெடுபிடிகளை எதிர்த்தும் சமூக ஏகாதிபத்தியத்தின் பயங்கரத்தன்மையை அம்பலப்படுத்தியும் மூன்று உலகக்கோட்பாட்டை ஆதரித்தும் இக்கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு.கே.ஏ. சுப்பிரமணியம் தேசியஜனநாயக முன்னணியைச் சேர்ந்த திரு. ஜி. ஐ. டி. தர்மசேகரா இலங்கை வாலிபசங்கசம்மேளனத்தைச் சேர்ந்த திரு. வை. வன்னியசிங்கம் தேசிய ஒருமைப்பாட்டு இயக்கத்தை சேர்ந்த திரு. ஏ. எஸ். எம். காசிம் கீழைக்காற்று இயக்க காமினியாப்பா இலங்கை கம்யூனிஸ்ட்கட்சியை சேர்ந்த திரு. கே. செந்தில்வேல் திரு நிகால்டயஸ் ஆகியோர் பிரதம பேச்சாளர்களாக கலந்து கொள்கின்றனர்.

# நெடுந்தீவின்

## பொருளாதார இயக்கம்

நீர்வளம் நிலவளம் குறைந்தது நெடுந்தீவு. சில ஆண்டுகளுக்கு முன்பு 15,000 குடிசனத் தொகையைக்கொண்ட நெடுந்தீவு தற்போது 6000 க்கு உட்பட்டுள்ளது. நூறாண்டு வாழவைக்கும் நெடுந்தீவு தன் தனிச்சிறப்பால் அதன் மக்களை ஈர்ந்துகொண்டே இருக்கும். இத்தீவிலுள்ள மூலப்பொருட்கள் மும்மடங்கு மக்களுக்கு, மும்மடங்கு செழிப்புடன் வாழ வழிவகுக்க வல்லது.

இம்மூலப் பொருட்களை எவ்வாறு பயன்படுத்துவது, உற்பத்தி செய்யப்படும் பொருட்களை எவ்வாறு தரம் கூட்டுவது, இவற்றை எவ்வாறு கொள்வனவு செய்வது, சந்தைப்படுத்துவது என்பனவற்றிற்குத் தீர்வுகாணின் நெடுந்தீவின் பொருளாதாரம் துரித முன்னேற்றமடையும். பொருளியல் நிபுணர்களின் உதவியும் ஒத்தாசையும் அரசாங்க நிதியும் கிட்டின் இத்தீவுக்கே மக்கள் குடியேற உந்திக்கப்படுவார்கள்.

தாமளாப்பு, வெட்டுக்களி, பெரியகளி போன்ற பல சதுரமைல்கள் விஸ்திரணமுள்ள மாரிகால நீர்த்தேக்கங்கள் இங்கு உண்டு. மழையை அடுத்து நான்கு மாதங்களும் நல்லின மீன்களும், பெரிய ருல்களும் இவற்றில் பிடிப்பார்கள். பின் இவற்றிலிருந்து எழும்பும் உவர்ப்புழுதி சோழகக்காற்றினால் அள்ளுப்பட்டு அவற்றின் வடக்குப் பக்கமாக உள்ள பயிர்களையும் குடிநிலங்களையும் சேதப்படுத்தும். இவற்றில் 12 மாதமும் நீர் தேங்கி நிற்பின் பல கோடி வெளிநாட்டுப் பணத்தைச் சம்பாதிக்க முடியும்.

இத்தீவைச் சுற்றியுள்ள சமுத்திரக் கடலில் மீன் ஏராளமாக உண்டென்று ஏனைய பகுதிகளிலுள்ள மீனவர்கள் அதை நாடி வருகின்றார்கள். இழு-வலை, இயந்திரப் படகுகள் இந்தியாவிலிருந்து நெடுந்தீவுக் கரையை நோக்கிவருகின்றன, ஆயினும் எம் ஊர் மீனவர்கள் கையாளும் முறைகளும் அவர்களிடமுள்ள உபகரணங்களும் இத்தொழிலுக்கு வளர்ச்சியைக் கொடுப்பதாயில்லை. இதன் காரணங்களை அறிந்து அவர்களுக்கு ஒத்தாசை கொடுத்தால் மீன் பிடித் தொழில் அபிவிருத்தி அடைந்து, கருவாட்டு உற்பத்தி ஊரடங்கிலும் குடிசைக்கைத்தொழிலாகி, உயர்ந்த தரக் கருவாடுகளை உற்பத்தி செய்யலாம்.

பனை அபிவிருத்திச் சபையை முற்றாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

### முருகைக்கல்லின்தூள்

முருகைக்கல்லின் சந்தைப்படுத்தக் கூடிய பொருள். இதைப் பிரதான மூலப் பொருளாகக் கொண்டு பல பொருட்களை உற்பத்தி செய்கிறார்கள். இத்தீவில் ஏராளமாகக் காணப்படும் இக்கல்லு, இத்தூள் தேவைப்படும் இடங்களில் இல்லை. இக்கல்லைக் கட்டுப்பாடாகப் பயன்படுத்தின் பலருக்குத் தொழில் வாய்ப்புண்டாகும்.

### மாட்டெரு

இங்கிருந்து படகு படகாக ஏற்றுமதியாகும் எருவைக் கொண்டு இவ்விடத்திலேயே தரமுள்ள இயற்கைப் பசளையை உற்பத்தி செய்யலாம். இதற்கு வேண்டிய வேறு பல மூலப் பொருட்களும் இங்கு உண்டு.

இவ்வாறான பல துறைகளில் தீவிர கவனம் செலுத்த, நெடுந்தீவு மக்கள் தங்கள் பொதுச்சேவைக் கூட்டுறவுச் சங்கத்தைப் புனருத்தாரணம் செய்யவேண்டுமென ஒரு பொதுக் கூட்டம் கூடித் தீர்மானித்தார்கள். பொருளாதார இயலில் நிபுணத்துவம் பெற்ற அவ்வூர் உதவி அரசாங்க அதிபரின் தலைமையில் ஒரு செயற்படுத்தும் குழுவும் நியமிக்கப்பட்டது.

இம்மாதம் 20 ம் திகதி புதன் கிழமை ஒரு வெகுசனக் கூட்டமும் நெடுந்தீவுப் பொதுச் சேவைக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டமும் நடாத்தப்படவிருக்கின்றன.

--ஞா. மரியநாயகம்பிள்ளை

## முகமாலை ஆரோக்கியமாதா உற்சவம்

(யாழ்ப்பாணம்)

நாளை முகமாலை புனித ஆரோக்கியமாதா கோயில் உற்சவத்தை யொட்டி இன்று மாலை நற்கருணை ஆராதனையும் பவனியும் நடைபெறும்.

பக்தர்கள் ஆலய வளவில் தங்கி வழிபாடுகளில் கலந்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாளை இரவு மிருசுவில் நாடகமன்றத்தின் ''ஞான சௌந்தரி'' நாட்டுக் கூத்தும் இடம்பெறும். (உ)

### எகிப்து--இஸ்ரேலிய

# சமரஸப் பேச்சுவார்த்தை நீடிக்கும் அறிகுறி

மேரிலண்ட், செப். 15
காம்ப்டேவிட்டில் மத்தியகிழக்குப் பிரச்னை தொடர்பாக இஸ்ரேலுக்கும் எகிப்துக்குமிடையே நடைபெற்றுவரும் நேரடிப் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நீடிக்கும் அறிகுறிகள் நேற்றுக் காணப்பட்டதாக அறிக்கைகள் தெரிவித்தன.

இப்பேச்சுவார்த்தைகள் குறித்து எகிப்தியப் பிரதிநிதிகள் அதிருப்தி கொண்டிருந்தாலும் பேச்சுவார்த்தைகளில் அவர்கள் மத்தியில் நம்பிக்கை இருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது என்றும் அவ்வறிக்கைகள் தெரிவித்தன,

கடந்த 5ந்தேதி இப்பேச்சுவார்த்தைகள் காம்ப்டேவிட்டில் அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மி கார்ட்டரின் ஏற்பாட்டின் பேரில் ஆரம்பமாகி தொடர்ந்துநடைபெற்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

(உ)

### காம்ப்டேவிட்மகாநாடு:

## உடன்பாடு ஏற்படும்?

மேரிலண்ட், செப். 15
காம்ப்டேவிட்டில் நடைபெற்றுவரும் மத்தியகிழக்கு அமைதிப் பேச்சுவார்த்தையில் சமரச உடன்பாடு காணக்கூடிய அறிகுறிகள் தோன்றியுள்ளதாக வெள்ளை மாளிகை அதிகாரிஒருவர் கருத்துத்தெரிவித்தார்.

மத்தியகிழக்கு அமைதி குறித்து எகிப்திய-இஸ்ரேலிய தலைவர்களிடையே நடைபெற்று பின்னர் தடைப்பட்டிருந்த பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க இந்த உச்சி மகாநாடு வழிவகுக்கும் என்றும் அந்த அதிகாரி கூறினார். (இ)

## 100ஆண்டுகளுக்குமுன் முட்டைக்கோவாவுக்கு தங்கப்பதக்கம்

மாஸ்கோ, செப். 15
1875ம் ஆண்டில் வியட்னாமில் நடைபெற்ற சர்வதேச மரக்கறி,பழகண்காட்சிக்கென ரஷ்ய விவசாயி யெஃபீம் கிருசோவ் வழங்கிய முட்டைக்கோவாவுக்கு தங்கப்பதக்கம் கிடைத்தது.

இந்தக் கோவாவினது 'முட்டை'யின் விட்டம் 70 சென்டிமீட்டர்களாக இருந்தது.

மரக்கறிச்செய்கையில் குறிப்பாக முட்டைக்கோவா செய்கையில் ரஷ்ய விவசாயிகள் உலகில்பேர்போனவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# ரஷ்ய ஜனாதிபதி பாரதம் வருவார்

புதுடில்லி, செப். 15
சோவியத்யூனியன் ஜனாதிபதி திரு. பிரஸ்னேவ் இவ்வருடம் டிசம்பர்மாதம் அல்லது அடுத்தவருட முற்பகுதியில் பாரதத்துக்கு விஜயம்செய்யவிருக்கிறார்.

இத்தகவலை தற்போது சோவியத்யூனியனுச்கு விஜயம் மேற்கொண்டுள்ள பாரத வெளிநாட்டமைச்சர் திரு. வாஜ்பாய் வெளியிட்டுள்ளார்.

சோவியத்யூனியனுக்கு விஜயம் செய்திருந்தபோது பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் பாரதத்திற்கு வருமாறு விடுத்திருந்தவேண்டுகோளை திரு. வாஜ்பாய் ஜனாதிபதி திரு. பிரஷ்னேவுக்கு நினைவூட்டினார்.

இதனையடுத்தே அவர் பாரதத்துக்கு விஜயம்செய்வது குறித்து இணக்கம் தெரிவித்துள்ளார். ]உ]

## எம். ஜி. ஆர். அன்பளிப்பு

சென்னை, செப். 14
பீகார் மாநிலத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டமக்களின் நிவாரணப்பணிகளுக்கு தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் 10ஆயிரம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கிஉள்ளார். (இ)

## சட்டசபையில் ஈ.வெ.ரா. - அம்பேத்கார்

சென்னை, செப். 15
ஈ. வெ. ரா. பெரியார், அம்பேத்கார் ஆகியோரின் உருவப்படங்களை தமிழ்நாடு அரசு சட்டசபையில் திறந்துவைக்க முடிவுசெய்துள்ளது. [உ]

# "லெபனானில் சமாதானப்படை மேலும் நீடிக்க வேண்டும்"

## ஐ. நா. செயலாளர் கோரிக்கை

வாஷிங்டன்,செப். 15
லெபனானில் நிலைகொண்டுள்ள ஐக்கியநாடுகளின் சமாதானப்படையை மேலும் 6 மாதங்களுக்கு அங்கு நீடித்திருக்கச் செய்யவேண்டுமென ஐ. நா. பிரதம செயலாளர் கலாநிதி வால்ட்ஹெய்ப், ஐ. நா. பாதுகாப்புச் சபையிடம் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

மத்தியகிழக்கில் சமாதானம் ஏற்பட பொதுவான சமாதானத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படவேண்டுமென்றும் கலாநிதி வால்ட்ஹெய்ம் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த மார்ச் மாதத்திலிருந்து லெபனானில் ஐ.நா.சமாதானப்படை நிலைகொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. [உ]

## கொரில்லாத் தலைவர் கைது!

ரோம், செப் 15
முன்னாள் இத்தாலியப் பிரதமர் திரு, அல்டாமொரோவைக் கடத்திச்சென்று கொலை செய்தது தொடர்பாக சந்தேகத்தின்பேரில்இதுவரைதேடப்பட்டுவந்த கொரில்லாத் தலைவனை ரோம் பொலிசார் நேற்றுக் கைதுசெய்தனர். (இ)

## விஜயவீரா யாழ். வருகிறார்

(டண்டத்தரிப்பு)
ஜனதா விமுக்தி பெரமுனை (மக்கள் விடுதலை முன்னணி) தலைவர் திரு. ரோகண விஜயவீர இம்மாதம் 23-ம் திகதி யாழ் மாவட்டத்திற்கு விஜயம் செய்கிறார்.

இவர் சுன்னாகம், அளவெட்டி ஆகிய இடங்களில் நடைபெறவுள்ள கருத்தரங்குகளிலும், யாழ். மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் நடைபெறவுள்ள கருத்தரங்குகளிலும் கூட்டங்களிலும் கலந்துகொண்டு உரையாற்றுவார்.


அறிமுகப்படுத்துகிறோம். புதிய

ஹெடோனல் எம் 60%

60% எம். சி. பீ. ஏ. ஏமீன் உப்பு அடங்கிய களை கொல்லி.




நெல் வயலில் வளரும்
சந்தனக் கோரை, சிறு கோரை
நீர் கோவா மற்றும்
எல்லா களைகளையும் அழிக்கும்.

பயிர்களையும் பண லாபத்தையும்
பாதுகாக்கப் பாவியுங்கள்.

அறிவுரைச் சேவைக்கு எம்முடன்
தொடர்பு கொள்ளுங்கள்

பயிர்களைக் காத்துப் பண லாபம்
பெறப் பாவியுங்கள் பேயர் விவசாய
ரசாயனப் பொருட்கள்.

மூலப் பொருட்சத்து
உத்பத்தியாளர் :
பேயர் ஜெர்மனி.

BAYER

இலங்கையில் தயாரிப்போர் :
ஹேக்கெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.


# கழுத்தில் சுருக்கிட்டு வாலிபர் தற்கொலை

## கொழும்புத்துறையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
பயிர்ச்செய்கை உத்தியோகத்தரான இளைஞர் ஒருவர் கழுத்தில் சுருக்கிட்டு உயிர் மாய்த்தார்.

காலமானவர் கொழும்புத்துறையைச்சேர்ந்த சரவணமுத்து மனோகரநாதர் (வயது 28) என்பவராவார்.

காலஞ்சென்றவருக்கு திருமணம் பேசியிருந்ததாகவும் கடந்த 3 மாதங்களாக இவர் கவலை தோய்ந்தவராக காணப்பட்டாரென்றும், சம்பவதினத்துக்கு முதல்நாள் இரவு சாப்பாட்டிற்குப்பின்பு அவர் வீட்டுவிறுந்தையில் படுத்திருந்ததாகவும், மறுநாள் காலை காலஞ்சென்றவரின் மருமகள் முறையானவர் நாவல்பழம் பிடுங்க வளவுப்பக்கம் சென்றபோது மாமனார் மரத்தடியில் நிற்பதைக் கண்டு வீட்டில் வந்துசொன்னதாகவும்போய்ப் பார்த்தபோது நாவல்மரத்தில் சுருக்கிட்ட நிலையில் அவர் மரணமாகியிருந்ததாகவும், மரணவிசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

மரணவிசாரணை நடத்திய யாழ்ப்பாணம் மரணவிசாரணை அதிகாரி சட்டத்தரணி எஸ் எஸ். பிரான்சிஸ் விசாரணை நடத்தி தற்கொலை என்று தீர்ப்பளித்தார்.

இவரது மரணத்தில் யாழ்ப்பாணம், நல்லூர் பகுதிகளைச் சேர்ந்த பயிர்ச்செய்கைக்குழு உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டு மலர்வளையம்சாத்தி அஞ்சலி செய்தார்கள்.

## வாரியார் விருந்து

கந்தபுராணம் உணர்த்துவது நன்றி மறவாமையாகும். நன்றி மறத்தலுக்கு பாவமன்னிப்பே கிடையாது. வேதத்திலும் இதற்கு இடமில்லை. உலகில் அக்கிரமங்கள் அதிகரிக்கும்போதே அவதாரம் நடைபெறுகின்றது. திரௌபதியின் துகிலுரிந்தபோது கண்ணன் அவதாரம் நிகழ்ந்தது, தேவர்களை அசுரர்கள் வருந்தியபோது முருகன் அவதாரம் நிகழ்ந்தது,

(எஸ். கே. எஸ்.)

## கலைக்களஞ்சியம்

மாஸ்கோ, செப். 15
சோவியத் பெருங்கலைக் களஞ்சிய வரிசையில் 29வது பாகமாக வெளிவந்துள்ள நூல் ஈழம் பற்றிய பல தகவல்களையும் விபரங்களையும் கொண்டுள்ளது

ஈழநாட்டின் இயற்கை வளம,வரலாறு, தற்போதைய அரசியல்நிலைமை, தொழிற்சங்க இயக்கம, கல்வி-கலாசாரத்துறை வளர்ச்சி ஆகியவற்றினை விபரிக்கும நூற்றுக்கணக்கான கட்டுரைகள் இக்கலைக் களஞ்சியத்தில் இடம பெற்றுள்ளன.

இலங்கை பற்றிய ஆராய்ச்சியில் நெடுங்காலமாக ஈடுபட்டுவரும கீழைத்தேயவியலாளர்களான ஈரா தல்மட், யூரி மஸ்லோவ், அலெக்சாண்டர் பெக்கோவிச் லெம்யோன் தியூலாக், மிலெட்டீனா கொடோங்ஸ்காயா முதலானோர் இக்கட்டுரைகளை எழுதியுள்ளனர்.

## ஆனைக்கோட்டையில் கலைவிழா

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை அமெரிக்கன் மிஷன் த. க. பாடசாலை வளர்ச்சி நிதிக்காக மாபெரும் கலைவிழாவொன்று இன்று நடைபெறுகின்றது.

ஆனைக்கோட்டை கிராம சபை அருகரங்கில் நடைபெறும். இக் கலைவிருந்தில் திரைப்பட, வானொலி மேடை நடிகர்கள் நடிக்கவிருக்கின்றனர்கள்.

சுதுமலை மக்கள் நாடக மன்றத்தின் ''பொம்மைகள்'' ஆனைக்கோட்டை வாணி கிரியேஷன்ஸ்சின் ''நினைவில் நீ'' சுதுமலை தம்பிராசாவின் ''நல்லைநகர் மாவீரன்'' ஆகிய நாடகங்கள் இக் கலைவிழாவில் இடம் பெறும். (சு.)


நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா
கணவன்

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சிவகுமார்
சொல்லத்தான் நினைக்கிறேன்

17-9-78 கடைசி தினம்
போன்: 7642.
சாந்தி (யாழ்நகர்) தினசரி 10-15, 2-15, 6-15, 10-00
ரஞ்சன், ரி. ஆர். ராஜகுமாரி நடித்த
சந்திரலேகா (புத்தம் புதிய பிரதி)
18-ம் திகதி முதல் சிவாஜி - விஜயா
செல்வம்

ராஜா (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவகுமார்-விஜயகுமார்
ஜெய்சித்ரா-தங்கவேலு
பொண்ணுக்கு தங்கமனசு
(புதிய பிரதி)

REGAL Jaffna 5th & LAST CROWDED WEEK
Phone: 360
Daily 4-30, 7-00, & 9-30p.m. only
Sophia Loren - Burt Lancaster - Richard Harris
in
THE CASSANDRA CROSSING

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
ஆ ல ய ம ணி
(புதியபிரதி)

லிடோ (யாழ். நகர்) போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
தாய்க்குத்தலைமகன்

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - தேவிகா
ஆண்டவன் கட்டளை
புதிய பிரதி

வின்ஸர் (யாழ்ப்பாணம்) போன்: 466 தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.-முத்துராமன்
ஜெயலலிதா-நாகேஷ்
நடித்த
ஒரு தாய் மக்கள்
(புதிய பிரதி)


## போயா தினத்தை யொட்டி இன்று சினிமாகாட்சிகளில்லை

## 'அன்றொருநாள்' திரைப்படம்:

# மேஜர் சம்பந்தப்பட்ட காட்சிகள் படப்பிடிப்பு!

[யாழ்ப்பாணம்]

அரச திரைப்படக் கூட்டுத்தாபனத்தினால் மிகச்சிறந்த பிரதியாக அங்கீகரிக்கப்பட்ட 'அன்றொருநாள்' திரைப்படத்தில் இரு காட்சிகள் அண்மையில் பிடிக்கப்பட்டது.

இம்மாதம் 5ந்தேதி கட்டடக் கலைஞர் திரு. வி. எஸ். துரைராஜாவின் காரியாலயத்தில் படப்பிடிப்பு நடைபெற்றது. இக்காரியாலயம், கொழும்பு பொலிஸ்கமிஷனர் காரியாலயமாக மாற்றப்பட்டது.

கொழும்பு பொலிஸ்கமிஷனராக மேஜர் சுந்தரராஜனும், கதாநாயகனாக டாக்டர் இந்திரகுமாரும் நடித்தார்கள். இம்மாதம் 6ந் தேதி மஹரகம கெஸ்ட் ஹவுஸில் நடந்த படப்பிடிப்பில், மேஜர் சுந்தரராஜன், விஜயாம்பிகை இந்திரகுமார், டாக்டர் இந்திரகுமார் ஆகியோர் நடித்தார்கள்.

இப்படத்தில் சிவாஸ்கர், நல்லூர் மனோகரன், ராம்தாஸ் செல்வசேகரன், சி. எஸ். பரராஜசிங்கம், ஏ. பிரான்சிஸ், சிதம்பரம், ஏகாம்பரம், சிவப்பிரகாசம், சந்திரகலா ஆகியோரும் நடிக்கின்றனர். (க)


By Popular Demand
Back Again
Rio (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
Born Black
(Adults Only)


## இன்று நடக்கும் சிவசமயதீட்சை

(வண்ணார்பண்ணை)

இன்று சனிக்கிழமை சிவசமய தீட்சை வைபவமொன்று நயினாதீவு ஸ்ரீகணேச கனிஷ்டமகா வித்தியாலய பெற்றோர் ஆசிரியர் சங்க ஆதரவில் நடைபெறவிருக்கிறது.

நயினாதீவு ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலய பிரதம குருவின் தலைமையில் மேற்படி ஆலயத்தில் நடைபெறும் இச்சிவதீட்சை வைபவத்தின் போது மேற்படி வித்தியாலய மாணவர்களும் சிவசமய தீட்சை பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேற்படி வித்தியாலய பெற்றோர் ஆசிரிய சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் இவ் வைபவத்தைத் தொடர்ந்து மில்க்வைற்அதிபர் சிவதர்மவல்லள் திரு. க. கனகராசா சித்தாந்த கலாநிதி திரு. க. கணபதிப்பிள்ளை சைவப்புலவர் க. சி. குலரத்தினம் வித்துவான் க. குகதாசன் ஆகியோர் சிறப்புச் சொற்பெருக்காற்றவுள்ளனர்.

## 'துப்பாக்கிச்சூடு சரியானதே' கமிஷன் அறிக்கை

சென்னை, செப். 15

கடந்த வருடம் அக்டோபர் மாதம் திருமதி இந்திரா காந்தி தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்த போது நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களின் போது நிகழ்ந்த பொலிஸ் துப்பாக்கிச் சூடு நியாயமானதே என்று சோமசுந்தரம் கமிஷன், அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

இளைப்பாறிய நீதிபதி திரு. சோமசுந்தரம் கமிஷன் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது சரியானதே என்று தீர்ப்பளித்த அறிக்கை நேற்று தமிழ்நாடு சட்டசபையில் சமர்ப்பிக்கப் பட்டது.

இத் துப்பாக்கிப் பிரயோகத்தின் போது மூவர் பலியானார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## நடிகர் சின்னையா கலந்துகொள்ளும் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

''நான் உங்கள் தோழன்'' ''புதியகாற்று'' முதலான படங்களில் நடித்துள்ள எஸ். எஸ். சின்னையா யாழ்ப்பாண விஜயம் ஒன்றினை மேற்கொண்டு இன்று வருகிறார்.

இங்கு அவர் கருத்தரங்குகளில் கலந்து கொண்டுஉரையாற்றுவார்.

இன்று பிற்பகல் யாழ். சைவபரிபாலன சபை மண்டபத்தில் நடைபெறும் கருத்தரங்கிலும் அவர் கலந்து கொள்ளவிருக்கிறார்.

இக்கருத்தரங்கில் செம்பியன் செல்வன், செங்கை ஆழியான் நவரஸ மன்னன் விஜயேந்திரன் ஜெயபாலன் பாலகிரி சிலோன் சந்திரன் உட்படபலர் உரையாற்றுவர். (உ)



பிரபல ஓவியக் கலைஞர் ரி. ரி. ஆரினால் நெல்மணிகளால் ஆக்கப்பெற்ற பிரதி தொழில் அமைச்சர் மைக்கேல் பெரேராவின் உருவத்தை காரைநகரைச் சேர்ந்தவரும், டொலர் காமென்ஸ் இன்டஸ்றி உரிமையாளருமான திரு. க. தர்மராசா தொழிலமைச்சுக் காரியாலயத்தில் வைத்து அன்பளிப்புச் செய்தார். திரு. க. தர்மராசாவும், கலைஞர் ரி. ரி. ஆரும் பிரதி அமைச்சரின் உருவப்படத்துடன் படத்தில் காணப்படுகின்றனர்.

## வீடமைப்பு:

# இலங்கைக்கு ஜப்பான் ரூ. 12 கோடி உதவும்

(கொழும்பு)

இலங்கையில் ஒரு லட்சம் வீடுகள் கட்டும் திட்டத்திற்கு ஜப்பான் நிதியுதவி அளிக்கவிருக்கிறது.

இவ் வீடமைப்புக்கான பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு ஜப்பான் இலங்கைக்கு 12 கோடியே 20 லட்சம் ரூபா கொடுத்துதவவிருக்கிறது.

இதற்கான உடன்படிக்கை அதிகாரிகளின் பேச்சுவார்த்தையை அடுத்து நேற்று கொழும்பில் கைச்சாத்தானது. (உ)

## நீதிவிசாரணை கோரிக்கை

சென்னை. செப். 15

மாணவர்கள், இளைஞர்கள் மீது பொலிசார் தாக்குதல் நடத்தியிருப்பது குறித்து நீதிவிசாரணை நடத்துமாறு இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. எம். கல்யாண சுந்தரம் முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனைக் கேட்டுக் கொண்டுள்ளார். (உ)

## பேச்சுவார்த்தை

(பண்டத்தரிப்பு)

அரசாங்க மருந்து கலவையாளர்கள் சங்க யாழ். மாவட்டக் கிளையின் பிரதிநிதிகள் கோஷ்டியொன்று, தங்கள் முக்கிய பிரச்னைகள் குறித்து யாழ். மாவட்ட சுகாதார சேவை அத்தியட்சகருடன் இம்மாதம் 20-ம் திகதி பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளனர்.

உதைபந்தாட்டம்:

## இன்றைய மோதல்கள்

(யாழ்ப்பாணம)

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன், யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்று வரும் விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இன்றைய மோதலில், கிறீன்பீல்ட் கழகமும் புனிதவளன் கழகமும் முதல் ஆட்டத்தில் மோதுகின்றன. இரண்டாவது ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் கழகமும் யாழ். முஸ்லீம்ஸ் கழகமும் மோதுகின்றன.

யாழ்.

## மேல்நீதிமன்றம் 18ல் விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மேல்நீதிமன்ற நீதிபதியாக ஜனாப் எம். ஜாமில் நியமிக்கப்பட்டுள்ளார். யாழ் மேல் நீதிமன்றத்தில் இம்மாதம் 18ம் தேதி காலை விசாரணை ஆரம்பமாகும். (க)

## விசேட நெல் விதைகள்

(பண்டத்தரிப்பு)

கீரிமலை கமநலச் சேவை நிலையத்தில் காலபோக நெல் விதைப்பில் ஈடுபடும் விவசாயிகளின் நலன்கருதி 'பினிலொட்' எனப்படும் விசேட விதை நெல் வர்க்கம் வழங்கப்பட்டு வருகின்றது.

விவசாய அடையாள அட்டைகளைச் சமர்ப்பிக்கும் விவசாயிகளுக்கே இந்த இன விதை நெல் வழங்கப்படுகின்றது. இவற்றைவிட சணல் விதை, மிளகாய் விதை என்பனவும் இங்கு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

## சிரமதான மூலம் குளமாழமாக்கல்

(யாழ்ப்பாணம)

நீர்வேலி தெற்கு நறுவிலித் தாள்குளம் சிரமதானப்பணி மூலம் ஆழமாக்கப்படவிருக்கிறது.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை தொழில் அதிபர் திரு. க. கனகராஜா குளத்தை ஆழமாக்கும் சிரமதானப் பணியை ஆரம்பித்துவைப்பார்.

நீர்வேலி கிராம அபிவிருத்திச் சங்க ஆதரவில் மேற்கொள்ளப்படவிருக்கும் இந்த ஆரம்பவிழாவில் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. வை. சொக்கலிங்கம், கோப்பாய் கிராம அபிவிருத்திச் சங்க உத்தியோகத்தர் திரு. யே. எஸ். பிறெட்றிக் ஆகியோர் கலந்து உரைநிகழ்த்துவார்கள். (ஈ)

## இன்று வரும் கம்யூ. பிரமுகர்கள்

[யாழ்ப்பாணம்]

இன்று யாழ்ப்பாணத்திற்கு வருகைதரும கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களான சட்டத்தரணி ராஜா கொலுறே, திரு. சாசனதாச ஆகியோர் கம்யூனிஸ்ட் கட்சி யாழ்ப்பாண மாவட்டக் கமிட்டிக் கூட்டத்தில் பங்குபற்றுவார்கள்.

நாளை காலை யாழ்ப்பாணம குருநகர் புதிய குடியேற்றத் திட்டத்தில் நடைபெறும கருத்தரங்கிலும, மாலை உடுப்பிட்டியில் நடைபெறவுள்ள பொன். கந்தையா நினைவு தின நிகழ்ச்சிகளிலும இவர்கள் பங்குபற்றுவார்கள்.

திருநெல்வேலியில் நேற்று முன்தினம் நடந்த

# உள்ளத்தைத் தொடும் ஒரு கண்ணீர்க் கதை!

(திருநெல்வேலி)

அது ஒரு சின்னக் குடும்பம்.

கணவன் மதுவுக்கு தினம் மயங்குபவன். மனைவியோ எட்டுமாதக் கர்ப்பிணி. தினம்தினம் நடக்கும் 'சண்டை சச்சரவு'களின் உச்சக்கட்டமாக நேற்று முன்தினமிரவு, தொட்டுத் தாலி கட்டிய மனைவிக்கு திடீரென ஒரு 'விஷப் பரீட்சை'நடத்தினன். முடிவு-

மனைவி கண்முன்னே பலியானது கண்டு துடிதுடித்துப் போனன் கணவன்! இதன் எதிரொலி—

கணவனும், மனைவி வழி சென்றுவிட்டான்;

உள்ளத்தைத் தொட்டு நிற்கும் ஒரு சின்னக்குடும்பத்தின் இந்தக் கண்ணீர்க் கதை வியாழக்கிழமை இரவு ஏழரை மணியளவில் திருநெல்வேலியில் நிகழ்ந்துள்ளது!

இதுபற்றிக் கூறப்பட்டதாவது:-

''திருநெல்வேலியைச் சேர்ந்த சிவராஜா கதிர்காமநாதன் (24 வயது) திருநெல்வேலிச்சந்தையில் மரக்கறி வியாபாரம் செய்பவர். ஒரு தரகரும்கூட. லலிதாம்பிகையை (22 வயது) திருமணம் செய்து பதினெரு மாதங்கள்தான் ஆகின்றன. மனைவியோ எட்டுமாதக் கர்ப்பிணி.

''மதுவுக்கு தினம் மயங்கும் கணவன், மாலையில் வீடு திரும்பினல் ஒரே சண்டை, சச்சரவுதான். இந்தச் சின்னக் குடும்பத்துக்கு இது ஒரு தொடர் கதையாகவே நீடித்தது. இந்த நிலையில்...

''நேற்று முன்தினமிரவு வழக்கம்போல கணவன்... மனைவிக்கிடையே 'சச்சரவு' தொடர்ந்தது. பணம் தரும்படி கணவன்கேட்க, மனைவி மறுக்கவே, அடி. உதை விழுந்தது, அக்காவுக்கு அடிவிழுந்து அவள் அவஸ்தைப்படுவதைக் கண்டு துடித்த தம்பி உதயகுமார், அயல்வீடு சென்றிருந்த தனது தாயிடம் ஓடோடிச் சென்று கூறவே, தாயும் பதறித் துடித்துக்கொண்டு விடுவந்தார். அங்கு—

''மகள் அழுது கொண்டிருக்க, மருமகனும் தன் நிலை மறந்து அழுதுகொண்டிருந்தார். தாய் விசாரித்தபோது, கணவர் குடிபோதையில் வந்து பணம் கேட்டதாகவும், மறுக்கவே அடித்து உதைத்தார் என்றும் வயிறுகூட நோவதாகவும் மகள் கூறவே, அந்த இடத்திலிருந்த கணவர், முன்பக்கமாக எழுந்துசென்ருராம்

அவர்கள் வீட்டுக் கிணறும் வீட்டின்முன்புறமாகத்தான் இருக்கிறது.

''திடீரென்றுகிணற்றடிப் பக்கம் சத்தம் கேட்கவே, விளக்கை எடுத்துக்கொண்டு கிணற்றடிப் பக்கமாகச் சென்ருர்கள். அங்கு எவரையும் காணுததால் சந்தேகம் எழுந்தது.

கிணற்றுக்குள் அவர் விழுந்துவிட்டாரோ என்ற செய்தி மனைவி காதில் விழவே, அந்தக் கர்ப்பிணிப் பெண் தனது சணவன் கிணற்றில் குதித்துவிட்டாரே என்று கலங்கி ஓடிச் சென்று அந்த ஆழமான கிணற்றில் குதித்துவிட்டாள்! அப்பொழுதுதான் அடுத்த பயங்கரமும் நிகழ்ந்தது!

''கிணற்றடிப்பக்கமாக இருட்டிலிருந்த கணவர், திடீரெனத்தோன்றி கிணற்றில் குதித்துவிட்டார்!

''அழுகுரல் எழுப்பப்படவே, அயலவர்கள் ஓடி வந்தனர். ஆனாலும் எதுவுமே பலனளிக்கவில்லை. பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டும் உடனடிப்பலன் எதுவும் ஏற்படவில்லை.

''நீர் இறைக்கும் இயந்திரங்கள் வரவழைக்கப்பட்டு கிணற்று நீர் வெளியேற்றப்பட்டது. முடிவு—

நேற்றுக் காலையிலேயே அந்த இளம் தம்பதிகளின் உயிரற்ற சடலங்கள் கிணற்றின் அடியிலிருந்து மீட்கப்பட்டன!

கிணற்றடிப்பக்கமாகக் கதிர்காமநாதன் சென்றபோது கேட்ட சத்தம், ஒரு பாருங்கல்லைக் கிணற்றுக்குள் போட்டதால் ·எழுந்த சத்தமாகத்தான் இருக்க வேண்டும் என்றும் விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது. கணவன் நடத்திவிட்ட ஒரு 'விஷப்பரீட்சை'க்கு மனைவி அநியாயமாகப் பலியாகிவிட்டார் என்றும். மனைவியின் இந்தத் திடீர்முடிவுக்கு கணவனும் பலியாகிவிட்டார் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு, எஸ். கனகரத்தினம் நேற்றுக்காலை நடத்திய மரணவிசாரணையின்போதே மேற்கண்ட விபரங்கள் தெரியவந்தன. மரணவிசாரணையில் லலிதாம்பிகையின் தாயார் திருமதி பாலசிங்கம் சுந்தரேஸ்வரி, மகன் உதயகுமார் அயல்வீட்டுக்காரர் ஸ்ரீரங்சநாதன் ஆகியோர் சாட்சியமளித்ததைத் தொடர்ந்து திடீர் மணவிசாரணை அதிகாரி. திரு எஸ். கனகரத்தினம், இருவரின் மரணங்களும் ·தறகொலையினுல் நிகழ்ந்தது என்று தீர்ப்பு வழங்கினுர்,

நேற்றுமாலை இருவரினதும் சடலங்கள் திருநெல்வேலி மயானத்தில் ஒன்ருகவே தகனம்செய்யப்பட்டது. பெருந்திரளான மக்கள் மயானத்தில் கூடியிருந்தனர்.

அவர்களின் உடல்கள் தகனம் செய்யப்படுவதற்கு முன்னர் நிறைகர்ப்பிணித் தாயின் வயிற்றிலிருந்த சிசு அகற்றப்பட்டு அதே மயானத்தில் புதைக்கப்பட்டது.

அந்த அழகான பெண் சிசு பெற்றேர் தகனம் செய்யப்பட்டதற்கு அண்மையிலேயே அடக்கம்செய்யப்பட்டது.

## நிதிஒதுக்கீடு

]பண்டத்தரிப்பு[

மாதகல் சென் தோமஸ் பெண்கள் பாடசாலையில்புதிய வகுப்பறை மண்டபம அமைப்பதற்கு எதிர்க்கட்சித் தலைவரும, காங்கேசன்துறை தொகுதி எம. பி.யுமான திரு. அ. அமிர்தலிங்கம 10ஆயிரம ரூபாவை பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கியுள்ளார்.

நாளை

## வன்னியசிங்கம் நினைவுதினம்

(யாழ்ப்பாணம்)

அமரர் வன்னியசிங்கம் நினைவு தினம் நாளை ஞாயிறு மாலை இருபாலைச்சந்திக்கருகில் கோப்பாய் எம்.பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை தலைமையில் நடைபெறவிருக்கிறது.

தமிழர் விடுதலைக்கூட்டணி தலைவர் திரு.எம் சிவசிதம்பரம் எம். பி. மற்றும் எம்.பி.க்கள் திருவாளர்கள் வி. தர்மலிங்கம், க. துரைரத்தினம். கா. பொ. இரத்தினம், வெ. யோகேஸ்வரன், செந்தமிழர் இயக்கச் செயலாளர் திரு,வி. பொன்னம்பலம், திரு. மு. ஆலாலசுந்தரம் உட்பட பலர் உரையாறுவர். (ஈ)

# பக்திசிரத்தையுடன் நடந்த துர்க்காதேவி தேர்விழா

## தேரின்வடத்தை பெண்களும் ஆண்களும் இழுத்த காட்சி

[மாவிட்டபுரம்]

பிரசித்திவாய்ந்த தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய இரதோற்சவ விழா பக்தி சிரத்தையுடன் நேற்றுமுன்தினம் விமரிசையாக நடைபெற்றது.

ஆலயத்திற்கென புதிதாக அமைக்கப்பட்ட லட்ச ரூபா செலவிலான புதிய சித்திரத் தேரில் துர்க்காதேவி எழுந்தருளி வீதிவலம் வந்து அடியார்களுக்கு அருள்புரிந்தார்.

தேரின் வடத்தை ஒருபுறம் ஆண்களும் மறுபுறம் பெண்களும் குறிப்பாக இளம்பெண்களும் சேர்த்து இழுத்த காட்சி அனைவரது கவனத்தையும் ஈர்த்தது. இந்த உற்சவத்தில் கூடிய பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் இளம் பெண்களே கூடுதலாக காணப்பட்டனர்.

விசேட பண்ணிசைக் கச்சேரிகளும், பிரபல நாகசுர தவில் கலைஞர்களின் இன்னிசைக்கச்சேரியும் நடைபெற்றது. உற்சவத்தில் கூடிய பக்தர்களுக்குக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது. ஆலய நிர்வாக சபைத் தலைவர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி உற்சவ ஒழுங்குகளை அவதானித்துக்கொண்டிருந்தார்.

இவ் உற்சவத்தையொட்டி குரும்பசிட்டி அம்மன் கோவிலில் இருந்து பக்தர் இந்துதாசனுல் தேர்க்காவடி ஒன்றும் எடுத்துவரப்பட்டு நேர்த்தியை நிறைவேற்றினுர்.

எதிர்பாராதவகையில் பக்தர்கள் தொகை அதிகமாக ஆலயத்தில் காணப்பட்டதால் போக்குவரத்து ஒழுங்குகளைச் செய்வதில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளபோதிலும். பொலிசார் ஒழுங்குகளைக் கவனித்து வேண்டிய ஏற்பாடுகளை செய்தனர்.

# "இந்துசமயக் கல்விக்கும் தனிக் கலாசாலை வேண்டும்"

(யாழ்ப்பாணம)

'இலங்கையில் தார்மீக சமுதாயந்தைக்கட்டி எழுப்பும் முயற்சியில் ஈடுபட்டுள்ள இன்றைய அரசாங்கம் சமயக்கல்விக்கு முக்கியம் கொடுத்துள்ளமையை நாம் வரவேற்கின்றேம். அதே வேளையில் அரசாங்கம் பௌத்த மதக்கல்விக்கான கலாசாலையை மீரிகமவில் அமைத்துள்ளது போல் இந்துசமயக் கல்விக்கும் ஒரு தனிக்கலாசாலையை அமைத்துத் தரவேண்டும். இக்கலாசாலைக்கான வசதிகளையும் கொண்டதாக எமது குருகுல பாடசாலை அமைந்துள்ளது. நிதிவசதியை மட்டும அரசாங்கம் அளித்து இக்குருகுல பாடசாலையை இந்துசமயக்கல்விக் கலாசாலையாக அமைக்க முன்வருமாறு அரசாங்தைக் கேட்கின்றேம்''

யாழ். சிவானந்த குருகுல பரிபாலனசபையின் நிர்வாக சபைக் கூட்டத்தில் ஜனதிபதியையும், கல்வியமைச்சரையும் கோரும் பிரேரணை கொண்டு வரப்படவிருக்கிறது.

குருகுல பரிபாலனசபையின் ஐந்தாவது ஆண்டுக்குரிய நிர்வாகசபை, ஆலோசனைச்சபை கணக்குப் பரிசோதனைக்குழு ஆகிவனவற்றின் புதிய உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் பொதுக்கூட்டம்]. இம்மாதம் 17-ந் திகதி நீராவியடி ஸ்ரீநடேசப் பெருமாள் ஆலய மண்டபத்தில் நடைபெறஉள்ளது.

பிற்பகல் யாழ். சிவானந்த குருகுல பாடசாலையின் நான்காவது ஆண்டுவிழாவும் அமரர் சிவாகம வித்தியா பூஷணம் சிவஸ்ரீ இ.கு. பூர்ணனந்தேசுவரக்குருக்கள் எழுதிய 'விக்னேசுவரபூகாவிதி என்னும் நூலின் புதிய பதிப்பின் அறிமுக விழாவும் யாழ். வளாக இந்துநாகரிகத்துறை பீடாதிபதி கலாநிதி கா. கைலாசநாதகுருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் பண்டிதர் பிரமஸ்ரீ ச. பஞ்சரசர்மா.மட்டு நகர் சிவானந்த வித்தியாலய சமஸ்கிருத விரிவுரையாளர் சிவஸ்ரீ பூரண தியாகராஜக் குருக்கள் தொழில்அதிபர் திரு சு. கனகராசா ஆகியோர்கள் உரையாற்றுவர். (ஊ-உ)

## பொதுக் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

அராலி தெற்கு சனசமூக சேவா சங்க விசேட பொதுக் கூட்டம் இன்று மாலை அராலி தெற்கு கிராமமுன்லேற்றச் சங்க மண்டபத்தில் திரு. வீ. கணேசன் தலைமையில் நடைபெற்றது.

## திருமண நன்றிநவிலல்

செல்வத்துரை (U. K.)

தயாளினி

சித்தன்கேணியில் கடந்த 3-9-78 ல் நடைபெற்ற எமது திருமணத்திற்கு வருகை தந்து வாழ்த்தியவர்களுச்கும் அன்பளிப்புக்கள் வழங்கியவர்களுக்கும் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எமது இதயங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேம்.

திரு. திருமதி செல்வத்துரை

'ராஜஸ்தான்'
சித்தன்கேணி 0345

## கூட்டணி...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வெ. யோகேஸ்வரன் இல்லத்தில் பாராளுமன்றக்குழுகூடவுள்ளது. செயற்குழுவின் முடிவை பாராளுமன்றக்குழு ஆராய்ந்து செயல்படும்,

அமரர் வன்னியசிங்கம் நினைவு தின கருத்தரங்குமாலை யாழ். தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமைப் பணியகத்தில் நடைபெறும் கருத்தரங்கிற்கு யாழ்ப்பாண எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் தலைமைதாங்குவார். வடக்கு, கிழக்கு கூட்டணி எம். பிக்கள் கருத்தரங்கில் உரையாற்றுவர். (கெ-இ)

## தேசியமொழி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டு பொருளாதார விடைத்தாள்களுக்கும், 76ல் கல்வி டிப்ளோமா விடைத்தாள்களுக்கும் தமிழ் மாணவர்களுக்கு அதிக புள்ளி வழங்கப்பட்டது என்ருர்,

முன்னுள் யரீட்சை ஆணையாளர் திரு. பூகொட பிரேமரத்ன சாட்சியமளிக்கையில் கூறியதாவது.

### மொழிவாரி தரப்படுத்தலே தீர்வுக்கு வழி

மொழிவாரித் 'தரப்படுத்தல்' முறையே பல்கலைக்கழக அனுமதிதொடர்பான பிரச்னைக்கு விஞ்ஞான ரீதியான தீர்வு ஆகும். (ம.க)

டுபாயில், ஈரான், பாகிரீன், சவூதிஅரேபியா
ஆகிய நாடுகளுக்கு பாஸ்போர்ட் கைவசம் உள்ளவர்கள் உடன்

தேவை

தேவையான உத்தியோகத்தர்கள்:
மனேஜர்கள், கணக்காளர்கள், தாதிகள் விற்பனையாளர், ஸ்ரோர்கீப்பர், சிக்குறிற்றிமார், சாரதிகள், காரியாலயப் பையன்கள். தையல்காரர்கள், இயந்திரம் திருத்துவோர், பிளம்பர்கள், சமையல்காரர்கள், தோட்டக்காரர்கள், தச்சர், மேசன், டெலிபோன் தட்டெழுத்தாளர்கள், எலக்றிக்கல்ஸ், மோட்டார் மெக்கனிக்ஸ், பாதுகாப்பு அதிகாரிகள் [இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகஸ்தர்] ஆகியோர் தேவை. நேரடியாகவோ பதிவுத்தபால் மூலமாகவோ விண்ணப்பிக்குக.

ஜெயா டூர் சேவிஸ்

66, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

கொழும்பு கிளை:
ஜெயா டூர் சேவிஸ்,
முதலாம் மாடி,
43/1, காலிமுக திராஸ்,
கொழும்பு—3.

[0343]

COLOMBO - BRANCH:
JEYA TOUR SERVICE,
FIRST FLOOR,
43/1, GALLEFACE TERRACE,
COLOMBO—3.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம்சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box 49, Telegram Eelanaadu, Telephone 389 Registered as a Newspaper in Srilanka.